நூல் 24

பெரியநாயகியம்மை

# நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம்

துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகள்.

உ

அம்பிகைதுணை.

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

விருத்தகிரி

## பெரியநாயகியம்மை

# நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன்
முக்கணுண் டகைநின தெழில்கூர்
முகம்புலர் தலைக்கண் டுடல்வளைந் தடியின்
முனைப்பிறைக் கோடுகொண் டுழுது
விழுமணி யரவ நுழைசடா டவியின்
விண்ணதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினுன்
னென்கொடி யெனநினை யுணர்ந்தேன்
செழுமணி நீல மழைமுகி றவழுஞ்
சிலம்பெனும் புற்றினின் றார்ந்து
திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத்
தினமணி யெனப்படுஞ் செங்கேழ்
கெழுமணி யுமிழ்ந்து பேரிரு டுரந்து
கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 1

விழைவொடு நினக்கு மாதுலன் மாமி
வெற்புவேண் டுறுதுதன் மருகன்
மேலெலா மெலும்புந் தோலுமாய்க் கிடத்தல்
வெறுத்திடா திளமைநா டாது
பழமலை தனக்குச் சாதியொப் பெனவே
பார்த்துனைக் கொடுத்ததுன் றந்தைப்
பனிமலை யென்றோ தன்மனை யாட்டி
பயந்திடப் பெருமக ளென்றோ
கழைவரை முன்ன ரூன்றுபு நடந்து
கடிதுபள் ளங்களின் வீழ்ந்து
கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க்
கடையுற வலைந்துருத் திரைந்து
கிழவுரு விருத்த நதியெனப் பட்டுக்
கீர்த்திமூ வுலகினும் போர்ப்பக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 2

காமமென் கின்ற கதுவுவெந் தீயுங்
கடுஞ்சின மெனப்படு புலியுங்
களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக்
கறையடிக் களிநல்யா னையுமே
தாமிகு மெனது மனமெனும் வனத்திற்
றனிவரல் வெருவினை யாயிற்
றழலினின் றுடிப் புலிகரியுரிபோர்
தடுத்தவாண் டுணையொடும் வருவா
யீமவெள் ளெலும்பிங் கிடப்படு மெனத்தா
னெலும்பணி கடவுண்மா நதியா
யிருந்துநல் லன்னங் கொண்டுமெய் வெளுப்ப
வினைதரு கங்கையை யிகழ்ந்து
கீழ்மைசொல் கின்ற தொன்று மின்றுயிற்
கிடைக்குமோ விதன்குண மென்னக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 3

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான
சொரூபியென் றருமறை யனைத்துஞ்
சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந்தேன்
சுரந்தநின் றிருமுலைச் செழும்பால்
வட்டிலிற் கொச்சைப் பிள்ளைமுன் னுண்டு
வண்புகழ் ஞானசம் பந்த
வள்ளலென் றிடப்பேர் பெற்றரன் மொழிபோன்
மையறீர் செய்யுள்செய் தமையா
லெட்டிநற் றிகிரி பறித்தெறிந் தூரற்கா
லியானையை யுருட்டிவாங் குதிரை
யெறிந்துசங் கதிர்த்துக் கொடுமர முறித்திட்
டெதிர்ந்திடார் தமைவிடுத் தோடிக்
கிட்டினர்ப் புரட்டி முருகவேள் பூதக்
கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 4

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா
முறுகுழி யேடுக ணிரவி
யொழிவிலா வாய்மை மெழுக்கினாற் பூசி
யுயர்தரு மனமெனப் படுமோர்
பள்ளிமென் றவிசி லிருத்திநின் பதியைப்
பழுதில்யா னெனப்படு நெல்லைப்
பழமல மாயைத் தவிடுமி போக்கிப்
பாகஞ்செய் தென்றருத் திடுவாய்
துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர்
சூழல்வெண் ணெய்க்குட முருட்டித்
துணைமுலைக் குவட்டின் மஞ்சண்மேற் படப்போய்த்
தோய்ந்துநின் றுடிளங் கயற்கட்
கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக்
கேடில்சீர்க் கண்ணனா டுதல்போற்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 5

நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு
நல்கிய தந்தையுந் தாயு
நம்பனு நீயு மல்லிர்நும் மூர்க்கே
நவின்றவம் முறையுளீர் நீவிர்
பாடியா ரணஞ்சொ லீண்டுமாய் வனதாம்
பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப்
பழமலை தனது பெயர்வலக் காதிற்
பகர்ந்தருள் செயப்பெறுஞ் செயலா
லோடியோர் காக மேறுபு கவிழ்த்த
வொருசிறு கரகநீர் தானு
மொருவனோர் செவியால் விடுத்தவப் புனலு
முமையொரு பாகர்கட் டோன்றிக்
கேடிலா னந்த வுருவமா மெனையொக்
கின்றன வோவென வதிர்த்துக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 6

தன்னொரு மகன்வா கனத்தினை வெறுத்தோர்
தனயன்வா கனத்தினை விரும்புந்
தண்மணிப் பணியு மதனையுள் வெருவித்
தான்வள ராமதி யமும்வாழ்
மின்னவிர் சடையான் றனைநினை யன்றி
மேவுவா னவரைநெஞ் சுன்னல்
விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து
வெறுமணி கொள்ளுமா றன்றே
மன்னவர் மனிதர் சந்திரன் பரிதி
மகபதி மலரயன் மறலி
வானவர் வசுக்கள் சித்தர்கிம் புருடர்
மாதவர் விஞ்சைய ரசுரர்
கின்னர ருரகர் மூழ்குபே ரரவங்
கேட்டொரு முராரிபாய் சுருட்டக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 7

படைத்திடுந் தொழிலோன் மறைச்சடங் கியற்றப்
பாவியேன் மனத்தினும் வலிய
பன்மணி குயின்ற செம்பொனம் மியினின்
பதமலர் வைத்தக லாம
லிடத்தினி லுனைவைத் தருளுதன் முன்னே
வியற்பகை மனைவியை யிரந்தா
னிளம்பிறை சூடு மிறையவன் பின்ன
ரெங்ஙனம் போயிரந் திடுவான்
கொடுத்தெனி லிடுபொன் புலவனுக் காரூர்க்
குளத்தினிற் பழமலை யன்று
கொடுத்தது நானே கொடுத்தன னென்னிற்
குளித்தகல் பவர்குளத் தெல்லாங்
கிடைத்திட வொருகண் டருமெனக் கிதுசெய்
கின்றதற் புதங்கொலோ வென்னக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 8

பண்டுநின் கொழுநன் றந்தையுந் தாயும்
பயந்ததன் னருமருந் தன்ன
பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும்
பாதக மொன்றுளங் கொண்டு
தொண்டர்தம் மனையிற் செல்வனென் றெழுநின்
சுதனழுப் பொருதுநின் முலைப்பால்
சுரந்தமு தூட்டு மன்னைநீ யாவாய்
தொழுதுபோய்ப் பிரித்திலை யென்னே
வண்டர்தங் கங்கை யன்னமங் கதன்க
ணுடல வாகிவந் தடையா
வாடியிங் கிதன்க ணமர்வுறப் பெறலா
லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து
கெண்டையொண் வாளை யுடனெழக் குதிப்பக்
கிளைவளைக் கமுகின்மேற் றவழக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 9

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம்
புலியினைச் சிறப்புலி யொடுகோட்
புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப்
புலிபணி மலையிள மானைப்
பரிவுறத் தொழுது மருவிய வதனாற்
பயமறச் சாதிக டனது
பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து
பசுவெலா மருவுறப் பெறுமே
சுரிகுழற் கயற்கட் பிறைநுதற் கனிவாய்த்
துடையிடைக் குவிமுலைத் தளிர்க்கைத்
துணைவிமுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ்
சுடர்மணிக் கட்செவிப் பணியான்
கிரிமகட் கெடுத்தக் கறைமிடற் றிறைவன்
கிளக்குமெற் புகழெனத் தோன்றிக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 10

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

அம்பிகை துணை

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க

விருத்தகிரி

பெரியநாயகியம்மை

# நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தத்தின்

# குறிப்புரை

**செய்யுள் (1)** ஊடறணிந்து முகமலரக்காண்பான் தேவியைப் பெருமானிறைஞ்சினமையை ஒருவாறு உருவகித்தது. முழுமணி- இலக்கணமுற்றுமமைந்த நீலமணி. கனல்- வினைத்தொகை. சிலம்பு-மலை. தினமணி - சூரியன். மாசுணம் ஆய் - பெரும்பாம்பு போன்று. ஆதல் - உவமவுருபிடைச்சொல்.

(2) வரைகழையென மாற்றுக. உருத்திரைந்து - உருவந்திரைந்து, உருத்து இரைந்து என்க.

(3) தடுத்தல் - வென்று உரிகவர்தலின்மேற்று. உரிபோர்த்தடுத்தவெனப் பாடங்கொண்டு கண்ணழிக்கில் மோனைநயமின்மை தேர்க. இம்மணிமுத்தநதி எலும்பிடப்படுமென்று தானும் எலும்பையணியும் தெய்வத்தன்மைபொருந்திய நதியாகி, இந்நதி போலவே அன்னங்கொண்டு மெய்வெளுப்ப இருத்தலால் அக்கங்கையை இகழ்ந்து இயம்பும் கீழ்மையொன்றும் இல்லையென்பீராயின் (கீழ்மையடையாமைமாத்திரத்தானே) இதன்குணம் அதற்குக்

கிடைக்குமோவெனக் கூறும்படி கிளர்கதியென்க. அணிதல்-இடப்படுதல். அன்னம்-பிண்டமும், அன்னப்பறவையுமாம். இதன் குணம்-சிவசாரூப மளித்தலாதியன. இருந்து - வினையெச்சத்திரிபு. அங்கிடப்படுமென்றும் இணைதபு வென்றும் பாடம்.

(4) கொச்சை - சீர்காழியையும், திருத்தமுறாச்சொல்லை யும்; எட்டி - எட்டிமரத்தையும்; தாவியென்னு மெச்சத்தையும்; திகிரி - மூங்கிலையும், சக்கரத்தையும்; வாங்குதிரை - வளைந்ததிரை யையும், தாவுங்குதிரையையும்; கொடுமரம் - வலியமரத்தையும், வில்லையும் உணர்த்தின.

(5) மலம் மாயை தவிடு உமி என்பன நிரனிறை. பாகம்-மலபரிபாகத்தையும், சமைத்தலையும்; அருத்தல்- சிவபோத முனைத் தெழாது அர்ப்பித்தலையும், உண்பித்தலையுங் குறித்தன.

(6) விருத்தகிரிக்கண் மாய்வனவாகிய உயிர்கள் பெறுஞ் செயலால் நாடின் நும்மூர்க்கு நவின்ற அம்முறையே நீவிருள்ளீர்; ஆகலின், எவ்வுயிர்க்கும் நீவிர் தந்தையுந்தாயும் அல்லீர் என நிந்தாஸ்துதியின்வைத்து அத்தலத்திலருளுமாறு நிகழ்த்தியவாறு. ஒருவனென்றது - சன்னு முனிவரை.

(7) பாய்சுருட்டல் பாற்கடலொலியினும் இவ்வொலி மிக்கிருத்தலாலென்க.

(8) கொடுத்து - பழமலைநாதராற் கொடுக்கப்பெற்று. குளத்தினிற்கொடுத்தது எனஇயையும். குளமென்பது-நெற்றி யையும் கமலாலயதீர்த்தத்தையும் சுட்டியது. நெற்றியிற் கண் தருதல் - சிவசாரூபமளித்தல்.

(9) கொள்ளல் - ஏற்றல். ஆடலவாகி இங்கு இதன்கண் அடையா ஆடி அமர்வுறவெனவும், கெண்டைகுதிப்ப எனவும் இயையும். ஆடல தன்னைவந்தடையா என்றும்பாடம்.

(10) புலி மானைத்தொழுது மருவியிருத்தலால் அம்மான் தனதினமாகிய பசுக்கள் தன்பாங்கரடைந்து தன்னால் அப்புலியைப் பயமற எய்தப் பெற்றதாயிற்று என்றறிந்து அப்பசுக்களெல்லாம் அம்மானுல் அப்புலியை அடையப்பெறுகின்றன வென்றது,

திருவருட்சத்தியானே ஆன்மாக்கள் சிவத்தையடைய வேண்டுமென்னும் சித்தாந்தநோக்கியென்க. தனதென்றது சத்தியையும், சாதிகளென்றது ஆன்மாக்களையுமாம். தேவியார் முன் கங்கையின் பெயரையுஞ் சொல்லாதகடவுள் அத்தேவியார்க்கு எனதுபுகழை எடுத்துக்கிளக்குமென்று ஆரவாரித்து அக்கங்கைபோலத் தான் மறையாது வெளிப்பட்டுவிளங்கும் இந்நதியென்றது அத்தலமான்மியங்குறித்தென்க. கிரிமகட்கடுத்த வென்றும்பாடம். அதில் பொருணயமின்மை தேர்க.

நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தத்தின் குறிப்புரை

முற்றிற்று.

---

ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகர் திருவடிவாழ்க.

---